25.10.2016

தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

## பூச்செடிகளைப் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்



எல்லாபுரம் ஒன்றியத்துக்கு உள்பட்ட கிராமங்களில் பூச்செடிகளைப் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

எல்லாபுரம் ஒன்றியத்துக்கு உள்பட்ட கன்னிகைபேர், பெருமுடிவாக்கம், குருவாயல், பூரிவாக்கம் அத்தங்கி காவனூர், வெங்கல்குப்பம், வெங்கல், புன்னப்பாக்கம், பாகல்மேடு கிராமங்களில் நெல், கரும்பு, கேழ்வரகு, காய்கறி வகைகள் பயிரிடப்படுகின்றன.

மேலும், 100-க்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில் மல்லி, முல்லை, சாமந்தி, கனகாம்பரம், ரோஜா உள்ளிட்ட பூச்செடிகளும் வளர்க்கப்படுகின்றன. குறைந்த

கால பயிரான சாமந்தி மட்டுமின்றி, நீண்ட கால பயிர்களான மல்லி, முல்லை ஆகியவை பயிரிடப்பட்டு 2 ஆண்டுகளுக்குப் பின் பூக்கத் தொடங்கும். பின்னர், 10 முதல் 15 ஆண்டுகள் வரை பூக்களின் விளைச்சல் இருக்கும். ஆண்டு முழுவதும் வருவாய் கிடைப்பதால், மேற்கண்ட பூச்செடிகளைப் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதுகுறித்து, விவசாயி ஒருவர் கூறியதாவது:

மற்ற பயிர்களைக் காட்டிலும், பூச்செடி வளர்ப்பில் உழைப்பு அதிகம். இதில், உழைப்புக்கேற்ற வருவாய் கிடைக்கும். முகூர்த்த நாள்கள், திருவிழாக் காலங்களில் ஒரு சேர் 200 ரூபாய் வரை விலை போகும். செடிகளை வைத்த இரண்டு ஆண்டுகள் வரை களை எடுப்பது, மருந்து தெளிப்பது என முறையாக பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு வந்தால், அடுத்த 10 ஆண்டுகள் வரை தொடர்ந்து வருவாய் ஈட்டலாம்.

பூ பூக்கத் தொடங்கியது முதல், ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதத்தில் செடிகளின் கிளைகளை வெட்ட வேண்டும் என்றார்.

## வேளாண் அறிவியல் மையத்தில் காளான் வளர்ப்பு பயிற்சி



அரியலூர் மாவட்டம், சோழமாதேவி கிராமத்திலுள்ள கிரீடு வேளாண் அறிவியல் மையத்தில் காளான் வளர்ப்பு பயிற்சி அண்மையில் நடைபெற்றது.

அறிவியல் மைய முதுநிலை விஞ்ஞானி அழகுகண்ணன் தொடக்கி வைத்து பேசினார். தொடர்ந்து விவசாயிகளுக்கு காளான் வளர்ப்பு பயிற்சியளிக்கப்பட்டது.இதில் கலந்து கொண்ட முன்னோடி விவசாயி மதியழகன் பேசுகையில், காளானில் புரதச்சத்து அதிகம் உள்ளதால், மனிதர்களுக்கு புரதச்சத்து குறைபாடு காரணமாக ஏற்படும் நோயை தீர்க்க வல்லது. மாவுச்சத்து குறைவாக உள்ளதால் சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கு ஏற்ற உணவு ஆகும். இரும்பு, பாஸ்பரஸ், கால்சியம் போன்ற சத்துக்கள் அதிக அளவில் இருப்பதால் ரத்தசோகை, பல் மற்றும் எலும்பு நோய்கள் வராமல் தடுக்க முடியும் என்றார் அவர்.

வேளாண் விரிவாக்க விஞ்ஞானி ராஜ்கலா கலந்து கொண்டு, பால் காளான் மற்றும் சிப்பிக்காளான் எவ்வாறு தயார் செய்வது என்பது குறித்து செயல்விளக்கம் அளித்தார். பயிற்சியின்போது, நிலத்தடி நீர் சேமிப்பு, பாலித்தீன், பிளாஸ்டிக் பொருட்களை தவிர்ப்பது, வீடு, கிராமங்களை சுத்தமாக வைத்திருப்பது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி தூய்மை இந்தியா பற்றிய உறுதிமொழி எடுக்கப்பட்டது.

பயிற்சியில், அரியலூர், கடலூர், தஞ்சாவூர், திருச்சி, புதுச்சேரி, விழுப்புரம்,கோவை உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**கருப்பை புற்றுநோய்க்கு வெங்காயம் சிறந்த மருந்து: ஆய்வில் தகவல்**



பெண்களுக்கு ஏற்படும் கருப்பை புற்றுநோய்க்கு வெங்காயம் ஒரு இயற்கையான மருந்தாக விளங்குவதாக ஜப்பான் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

ஜப்பானின் குமமோடோ பல்கலைக்கழக ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வில், கருப்பை புற்றுநோயை குணப்படுத்தும் ஆற்றல் வெங்காயத்துக்கு இருப்பதை கண்டறிந்தனர். வெங்காயத்தில்ல இருக்கும் ஓஎன்ஏ எனப்படும் குணம், கருப்பை புற்றுநோய் செல்களை அழிக்கும் ஆற்றல் பெற்றுள்ளது.

இதையடுத்து, கருப்பை புற்றுநோய் மருந்துகளில் வெங்காயத்தின் ஓஎன்ஏவை சேர்க்கவும், பிற புற்றுநோய் தடுப்பு மருந்துகளிலும் ஓஎன்ஏவை சேர்க்கவும் ஆராய்ச்சியாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### குளிர் கால இரண்டாம் போக காய்கறி சாகுபடிக்கு ரூ.3கோடி ஒதுக்கீடு

மூணாறு:குளிர் கால இரண்டாம் போக காய்கறி சாகுபடிக்கு மாநில தோட்டக் கலைதுறை ரூ.3 கோடி நிதி ஒதுக்கியுள்ளது.தேவிகுளம் ஒன்றியத்தில் மூணாறு அருகில் உள்ள தேவிகுளம், வட்டவடை,காந்தலுார் ஆகிய ஊராட்சிகளில் காரட், உருளை கிழங்கு, முட்டைகோஸ், காலிபிளவர், பட்டர் பீன்ஸ் மற்றும் பல்வேறு வகை பீன்ஸ் ஆகியவை பெரும் அளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

வட்டவடையில் கடந்த ஆகஸ்ட்டில் விளை நிலங்களை ஆய்வு நடத்திய வேளாண்துறை அமைச்சர் அனில்குமார், காய்கறி சாகுபடியை அதிகரிப்பதற்கு சிறப்பு 'பேக்கேஜ்' மூலம் நிதி ஒதுக்கப்படும் என அறிவித்தார்.

அதன்படி மூன்று ஊராட்சிகளிலும் 2ஆயிரம் ஹெக்டரில் குளிர் கால இரண்டாம்போக காய்கறி சாகுபடி செய்வதற்கு மாநில தோட்டக் கலைதுறை ரூ. 3 கோடி நிதி ஒதுக்கி உள்ளது.

இந்த நிதியின் மூலம் விவசாயிகளுக்கு ஹெக்டருக்கு ரூ. 15 ஆயிரம் நிதியுதவி வழங்கப்படுகிறது. குளிர் கால காய்கறி சாகுபடி செய்வோரும், செய்ய விரும்புவோரும் சலுகைகளை பெற அந்தந்த பகுதிகளில் உள்ள வேளாண் அலவலகங்களில் விண்ணப்பிக்க வேண்டும். விவசாயிகளுக்கு தேவையான நிதியுதவி நிதி நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுவதால், இதற்கு 10 முதல் 25 பேர் வரை கொண்ட சுய உதவி குழுக்களை அமைத்து, சுய தொழிலுக்கான திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

தேவிகுளம் வேளாண் உதவி இயக்குனர் தலைமையில் வேளாண் அதிகாரிகள் மூலம் திட்டம் செயல்படுத்தப்படும்.ஆகவே அந்தந்த பகுதிகளில் உள்ள வேளாண் அலுவலகங்களை விவசாயிகள் தொடர்பு கொண்டு பயனடையுமாறு உதவி இயக்குனர் போஸ்ஜோசப் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளுக்கான கருத்தரங்கம்**

பெத்தநாயக்கன்பாளையம்: பெத்தநாயக்கன்பாளையம் அருகே, புத்திரகவுண்டன் பாளையத்தில், சேலம் மாவட்ட உழவர் மன்ற கூட்டமைப்பு சார்பில், மேம்படுத்தப்பட்ட விவசாயம் குறித்து, விவசாயிகளுக்கான கருத்தரங்கம் மற்றும் பயிற்சி முகாம் நேற்று நடந்தது. முன்னாள் வேளாண் இணை இயக்குனர் ஜனகன் துவக்கிவைத்தார். இதுகுறித்து, ஜனகன் பேசுகையில், "இன்றைய சூழலில், சூழலியல் விவசாயம் செய்வது, கணக்கிட்டு விவசாயம் செய்வது, லாபகரமான விவசாயம் செய்வது எப்படி என்பது குறித்து, விவசாயிகள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்," என்றார். முகாம் முடிவில், சான்றிதழ் வழங்கப்படும்.

**முட்டை விலை 393 காசாக நிர்ணயம்**

நாமக்கல்: தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 393 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று நடந்தது. அதில், முட்டை உற்பத்தி, விற்பனை நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 390 காசுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை விலை, மூன்று காசு உயர்த்தி, 393 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்: சென்னை, 405, ஐதராபாத், 383, விஜயவாடா, 378, பர்வாலா, 392, மும்பை, 420, மைசூரு, 402, பெங்களூரு, 400, கோல்கட்டா, 422, டில்லி, 400 என, நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில், ஒரு கிலோ, 82 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த முட்டைக்கோழி விலையை, மூன்று ரூபாய் குறைத்து, 79 ரூபாய் என, நிர்ணயம் செய்யப்பட்டது. பல்லடத்தில் நடந்த உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில், ஒரு கிலோ, 71 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த கறிக்கோழி விலையில், எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மல்லசமுத்திரத்தில் சிறுதானியங்கள் மதிப்பு கூட்டு பயிற்சி முகாம்

திருச்செங்கோடு: திருச்செங்கோடு அருகேயுள்ள மல்லசமுத்திரம் வட்டார வேளாண்துறை சார்பில் சிறுதானியங்கள் மதிப்பு கூட்டு பயிற்சி முகாம் டந்தது. உதவி வேளாண் இயக்குநர் சண்முகம் தலைமை வகித்து, ராகி, வரகு, பனிவரகு, குதிரைவாலி, சாமை போன்ற சிறுதானிய பயிர்களின் மதிப்பு கூட்டுதலின் நோக்கம் குறித்து விளக்கி பேசினார்.

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் அழகுதுரை, சிறுதானிய ரகங்கள், சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து எடுத்துரைத்தார். சந்தியூர் வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியை கீதா, இயந்திரங்களை கொண்டு உமி நீக்குதல், சிறு தானியங்களை கொண்டு அவல், பொரி, சேமியா போன்றவை தயாரிப்பது பற்றி விளக்கினார்.

நிகழ்ச்சியில் மதிப்பு கூட்டப்பட்ட சிறுதானிய பொருட்கள் கண்காட்சி நடந்தது. வேளாண் அலுவலர் அருள்ராணி நன்றி கூறினார். இதில், சுமார் 50 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். இதற்கான ஏற்பாடுகளை வேளாண் அலுவலர் ராமசாமி, உதவி வேளாண் அலுவலர்கள் மோகன், முருகன், அலாவுதீன், சத்தியமூர்த்தி, பாரதி, செந்தில்குமார் ஆகியோர் செயதிருந்தனர்.

### நெற் பயிரில் புகையான் தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் வேளாண்மை இணை இயக்குநர் தகவல்

கிருஷ்ணகிரி : நெற் பயிரில் புகையான் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து, கிருஷ்ணகிரி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சங்கரன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டணம் மற்றும் வேப்பனஹள்ளி தாலுகாவில் 10 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி

செய்யப்பட்டுள்ளது. இந்த நெற்பயிரில் புகையான் தாக்குதல் காணப்படுகிறது. இந்த நோயை கட்டுப்படுத்த, நெற் பயிரில் சூரிய வெளிச்சம் நன்கு படும்படி பயிர்களின் இடைவெளியை நன்கு ஒதுக்கிவிட வேண்டும். நெல் வயலில் உள்ள தண்ணீரில் மண்ணெண்ணை கலந்துவிட வேண்டும்.

இந்த புகையான் பூச்சியை கட்டுப்படுத்த அதிகமான தழைச்சத்து இடுவதை தவிர்க்க வேண்டும். நீர் மறை நீர் பாய்ச்ச வேண்டும். நன்மை செய்யும் பூச்சிகளை பாதுகாத்தல் வேண்டும். வயலில் உள்ள தண்ணீரை சுத்தமாக வடித்துவிட்டு, வேர்களில் நன்கு படும்படி 5 சதவீதம் வேப்பங்கொட்டை கரைசல், புப்ரோபெசின் 25 எஸ்.சி., 300 மில்லி, இமிடா குளோப்ரிட் 17.8 சதவீதம், எஸ்.எல் 40 மில்லி, தயோகுளோப்ரிட் 40 எஸ்.சி 500 மில்லி, தயோமிதாக்சாம் 25 டபுள்யு.ஜி 40 கிராம், பெனோகார்ப் 50 சதவீதம் ஈ.சி 500 மில்லி, பிப்ரோனில் 5 சதவீதம் எஸ்.சி 500 மில்லி, குளோரான்ட்ரேனிலிப்ரோல் 18.5 சதவீதம் எஸ்.சி 60 மில்லி, இதில் ஏதேனும் ஒரு மருந்தினை கைத்தெளிப்பான் கொண்டு ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தூர்பாகம் முழுவதும் நனையும்படி தெளிக்க வேண்டும். இரண்டாவது முறையாக நீரை வடிகட்டி விட்டு ஏக்கருக்கு 10 கிலோ கார்பரில் 10 சதத்தூளை பயிரின் அடிப்பகுதியில் படும்படி தூவ வேண்டும்.

இவ்வாறு செய்வதன் மூலம் நோயை கட்டுப்படுத்தலாம். மேலும் விவரங்களுக்கு அருகில் உள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்திலுள்ள வேளாண் அலுவலர்களை அணுகி பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

**மஞ்சள் வரத்து இல்லாததால் ஏலம் ரத்து**

கோவை, : கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் திங்கள் மற்றும் வியாழன் மாலை தோறும் மஞ்சள் ஏலம் நடக்கிறது.

இங்கு கோவை, தொண்டாமுத்தூர் உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் மஞ்சளை ஏலம் மூலம் விற்பனை செய்கின்றனர். நேற்று மாலை நடந்த ஏலத்திற்கு ஒரு விவசாயி கூட மஞ்சள் கொண்டு வரவில்லை. இதனால் மஞ்சள் வரத்திற்காக காத்திருந்த வியாபாரிகள் ஏமாற்றமடைந்தனர்.

இதனால் அதிகாரிகள், ஏலம் ரத்து செய்து, அடுத்த ஏலம் வரும் 27ம் தேதி நடைபெறும் என்று தெரிவித்தனர். இதுபற்றி அதிகாரிகள் கூறுகையில், 'தீபாவளியை முன்னிட்டு விவசாயிகள் நேற்று மஞ்சள் கொண்டு வரவில்லை என தெரிகிறது. தீபாவளிக்கு ஒரு நாள் முன்பாக வரும் 27ம் தேதி நடைபெறும் ஏலத்திற்கும் விவசாயிகள் வருவார்களா, என்பதும் சந்தேகம் தான்' என்றனர்.

## சேவூரில் ரூ.ஒரு கோடிக்கு நிலக்கடலை ஏலம்

அனுப்பர்பாளையம், : அவிநாசி அருகே சேவூரில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூபாய் ஒரு கோடிக்கு நிலக்கடலை ஏலம் நடைபெற்றது. சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நடைபெற்ற ஏலத்தில் 4,815 நிலக்கடலை மூட்டைகள் கொண்டு வரப்பட்டன. கடந்த வாரத்தைவிட நிலக்கடலை வரத்து இரு மடங்கு அதிகரித்திருந்தது. குவிண்டால் ஒன்றுக்கு முதல் ரக நிலக்கடலை ரூ.5,670 முதல் ரூ.5,800 வரையிலும், இரண்டாவது ரகம் ரூ.5,010 முதல் ரூ. 5,400 வரையிலும், மூன்றாம் ரகம் ரூ.4,650 முதல் ரூ.4,900 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூபாய் ஒரு கோடிக்கு வர்த்தகம் நடைபெற்றது. இதில் அவிநாசி, அன்னூர், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர், கோபி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 652 விவசாயிகளும், 20 வியாபாரிகளும் பங்கேற்றதாக விற்பனைக்கூட கண்காணிப்பாளர் ராஜு தெரிவித்தார்.

## நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி 2 நாட்கள் நடக்கிறது

தஞ்சை : தஞ்சை கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நாட்டுக்கோழி வளர்ப்பு மற்றும் முதலுதவி மூலிகை பயிற்சி நாளை துவங்கி 2 நாட்கள் நடக்கிறது. தஞ்சை புதிய கலெக்டர் அலுவலகம் அருகே கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நாட்டுக்கோழி வளர்ப்பு, முதலுதவி மூலிகை குறித்த பயிற்சி நாளையும், 26ம் தேதியும் நடக்கிறது.

இந்த பயிற்சியில் சேர விரும்புவோர் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டையுடன் வரவேண்டும். இதுகுறித்து கூடுதல் தகவல் அறிய 04362 204009

என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் புண்ணியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

## வயல்களில் நன்மை செய்யும் பூச்சி அதிகரிக்கும் பயிற்சி முகாம்

நீடாமங்கலம் : நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் வயல்களில் நன்மை செய்யும் பூச்சிகளை அதிகரிக்க செய்யும் பயிற்சி முகாம் நடந்தது. நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் பாஸ்கரன் தலைமை வகித்தார். பூச்சியியல்துறை உதவி பேராசிரியர் ராஜாரமேஷ் பேசும்போது, தற்போதைய சாகுபடியில் பயிர் பாதுகாப்புக்கு ரசாயன மருந்துகளே அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதோடு தானியங்களில் எஞ்சிய நஞ்சாக தங்கி பல்வேறு வியாதிகள் தோன்றுவதற்கு முக்கிய காரணமாக திகழ்கின்றன. நன்மை செய்யும் உயிரினங்களும் அழிந்து விடுகின்றன என்றார்.

நெல் மற்றும் பிற பயிர்களில் நன்மை செய்யும் பூச்சிகளின் பெருக்கத்தை அதிகரிக்கவும் தீமை செய்யும் பூச்சிகளை விரட்டியடிக்கவும் மற்றும் கவர்ந்தழிக்கும் பயிர்களை வளர்க்கும் சுற்றுச்சூழல் பொறியியல் தொழில்நுட்பம் மூலம் மருந்துகளை பயன்படுத்தாமல் நெல் உள்ளிட்ட அனைத்து பயிர்களையும் பாதுகாக்கும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கத்துடன் பயிற்சி அளித்தார்.

## விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் இடுபொருட்கள் வேளாண் கருவிகள் விநியோகம்

வத்தலக்குண்டு : திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை வேளாண்மை உதவி இயக்குனர் முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: நிலக்கோட்டை வட்டார விவசாயிகளின் கவனத்திற்கு, நிலக்கோட்டை மற்றும் விளாம்பட்டி வேளாண்மை விரிவாக்க மையங்களில் வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தன் கீழ நெல் என்.எல்.ஆர் 34449 மற்றும் கோ.ஆர் 51 நெல்விதைகளும் கிலோ ஒன்றுக்கு ரூபாய் 10 மானியத்தில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் உயிர் உரங்கள் மற்றும் திரவ உயிர் உரங்கள் அசோஸ்பைரில்லம், பாஸ்போபேக்டீரியா, ரைசோபியம் போன்ற உயிர் உரங்களும் விநியோகம்

செய்யப்படுகிறது. உளுந்து வம்பன் 4 விதைகளும் தட்டை பயிறு கோ(த.ப) 7 (சான்று) விதைகளும் கிலோ ஒன்றுக்கு ரூபாய் 25 மானியத்தில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தின் கீழ் பவர் டில்லர் ரூ.75,000 மானியத்திலும், தேசிய உணவு பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் ரொட்ட வேட்டர் ரூ.35,000 மானியத்திலும், விசை தெளிப்பான்கள் ரூ.3,000 மானியத்திலும், நீர் கடத்தும் குழாய்கள் ரூ.15,000 மானியத்திலும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் இயந்திரம் மூலம் நெல் நடவு செய்யும் விவசாயிகளுக்கு 2.5 ஏக்கருக்கு ரூ.5,000 பின்னேற்பு மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. எனவே மேற்கண்ட வேளாண் இடுபொருட்கள் மற்றும் வேளாண் கருவிகள் தேவைப்படும் விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை அலுவலர் துணை வேளாண்மை அலுவலர் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்களை அணுகி பயனடையலாம்.

## இன்சூரன்ஸ் செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு

திருப்புவனம், : திருப்புவனம் வட்டாரத்தில் 2016-17ம் ஆண்டிற்கான பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தில் விண்ணப்பிக்க வேளாண் உதவி இயக்குநர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.திருப்புவனம் பகுதியில் தற்போது விவசாயிகள் பயிரிட்டுள்ள நெல், கடலை, உளுந்து, கரும்பு, பருத்தி போன்றபயிர்களுக்கு பிரதமரின்காப்பீட்டு திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்டு வருகிறது. ஒரு ஏக்கர் நெல்லு பிரிமியத்தொகை ரூ.330 செலுத்தினால் அதிகபட்சகாப்பீடு தொகையாக ரூ. 22ஆயிரம், கரும்புக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.1380 பிரிமியம் செலுத்தி ரூ.46 ஆயிரம் காப்பீடு பெறலாம்.இதுபோன்று உளுந்துஏக்கர் ஒன்றுக்கு ரூ.180 பிரிமியம் செலுத்தி ரூ.12 ஆயிரம், நிலக்கடலைக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.225 பிரிமியம் செலுத்தி ரூ. 17 ஆயிரம், பருத்திக்கு ரூ.850 செலுத்தி 17 ஆயிரம், வா ழைக்கு ரூ.1750 செலுத்தி ரூ.35ஆயிரம், மிளகாய்க்கு ரூ.900 செலுத்தி ரூ.18 ஆயிரம் காப்பீடு பெறலாம்.

போதிய மழையின்றி விதைக்க தவறினாலோ, மழையின்றி பயிர் கருகினாலோ 25 சதவீதம் இழப்பீடு பெறலாம். பயிர் காப்பீடு திட்டத்தில் பயன்பெற விரும்பும்

விவசாயிகள் நவ.31க்குள் விண்ணப்பிக்க வேண்டும் என வேளாண் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.